7th September 1959]

Sri M. C. MUTHUKUMARASWAMY : ஸார், தஞ்சை ஜில்லாவில் பண்ணையாட்களுடைய புள்ளிவிவரம் சேகரிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லுவதற்கான காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா

The Hon. Sri R. VENKATARAMAN : அதனால் பயன் இருந்தால்புள்ளி விவரங்கள் சேகரிக்கலாம். புள்ளி விவரம் சேகரிப்பது என்பதற்காக ஒரு வேலையை எடுத்துக் கொள்வது சரியல்ல.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், குறைந்த பட்சக் கூலி கொடுக்கக் கூடிய இதே நேரத்தில் இந்த விவசாயக் கூலிகளுக்கும் சம்பளத்தோடு லீவு வசதி போன்றவைகள் உண்டா

The Hon. Sri R. VENKATARAMAN : மினிமம் வேஜஸ் ஆக்டில் என்னென்ன சலுகைகள் உண்டோ, அவைகள் எல்லாம் உண்டு.

Sri A. A. RASHEED : Sir, is there any proposal to fix minimum wages for dhobies and barbers also?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Mr. SPEAKER : I gave a lot of time to this question because some Hon. Ministers are absent today. But hon. Members should not take this as a basis for future guidance.

Rebate for handloom cloth

*197 *Q.*—**Sri S. M. ANNAMALAI** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிக்கு கொடுக்கப்பட்டு வந்த ரிபேட்டை குறைக்க மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்காருக்கு உத்தரவு வந்ததா?

(ஆ) அப்படியானால், மாநில சர்க்காரின் முடிவு என்ன?

The Hon. Sri R. VENKATARAMAN : There is no reduction in the rate of rebate on retail sales of handloom cloth.

Sri S. M. ANNAMALAI : ஸார், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ரிபேட் தொகையில் குறைவு ஏதும் இல்லை என்று சொன்னார்கள். ஹோல்ஸேலில் ரிபேட் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு 9 நயா பைஸாவாக இருந்தது, பிறகு 6 நயா பைஸாவாக குறைக்கப்பட்டு இப்போது 3 நயா பைஸாவாகக் குறைத்திருக்கிறார்கள். இதைப்பற்றி வேறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா? வீடு கட்டிக் கொடுக்கக் கூடிய பணத்தைக் கொண்டு இந்த ரிபேட் தொகையை ஈடு செய்யக்கூடிய முறையில் ஏதாவது செய்திருக்கிறார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த ராஜ்யத்தில் பத்திரிகைகளில் மிகவும் தவறான ஒரு செய்தி வந்தது. அதாவது, மத்திய சர்க்கார் ரிபேட் தொகையைக் குறைத்துவிட்டார்கள் என்று எல்லா பத்திரிகைகளும் எழுதி விட்டன. ஆனால் உண்மையில் எது குறைக்கப்பட்டது என்று சொன்னால், இந்த ஹோல்ஸேல் ரிபேட்—மொத்த வியாபாரிகளுக்குக் கொடுக்கும் ரிபேட்—6 நயா பைஸாவிலிருந்து 3 நயா பைஸாவாகக் குறைக்கப்பட்டது. ஆனால் ஜனங்களுக்குக் கொடுக்கக்கூடிய ரிபேட் 6 நயா பைஸாவாக நீடித்துக் கொண்டிருக்கிறது. அதில் எந்த விதமான மாறுதலும் செய்யப்படவில்லை. ரிபேட் என்பது வாங்குகிறவர்களுக்கு—உபயோகிப்பவர்களுக்கு—ஊக்கம் அளிப்பதற்காகக் கொடுக்கப்படுகிறது. அந்த முறையில் பார்க்கும்போது கன்ஸ்யூமர்ஸுக்கு—உபயோகிப்பவர்களுக்கு—எந்தவித குறையும் செய்யப்படவில்லை. ஹோல்ஸேலர்

ஸுக்குக் கொடுக்கப்படுகிற இந்த ரிபேட்டானது மொத்த வியாபாரிகள் தான் அதை எடுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதைக் கொண்டு ஒரு நாளும் ஜனங்களுக்குத் தள்ளுபடி செய்து கொடுக்கவில்லை. ஆகவே, மொத்த வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படக் கூடிய ரிபேட் குறைக்கப் பட்டது என்பதற்காக அதிகம் கண்ணீர் வடிக்க வேண்டியதில்லை.

Sri S. M. ANNAMALAI: ஸார், இந்த ரிபேட்டை மேலும் மேலும் நீடித்துக்கொண்டு போகக்கூடாது என்று மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறார்களா ? இப்படி ரிபேட் கொடுத்துக்கொண்டு போவதால் இந்தப் பிரச்னை தீராது என்கிற காரணத்தினால், அதை வேறு வகையில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முறையில் செய்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: மத்திய சர்க்கார் ரிபேட் மூலமாக இந்த கைத்தறித் தொழிலை நீடித்து நடத்தவேண்டுமென்று கொள்கைக்கு அவ்வளவு ஆதரவு கொடுக்கவில்லை. ரிபேட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு, நாளடைவில் ரிபேட் என்பதையே எடுத்துவிடவேண்டுமென்பதுதான் அவர்களுடைய அபிப்பிராயம். இது மத்திய சர்க்காருடைய அபிப்பிராயம் மாத்திரமல்ல. ஆந்திராவின் அபிப்பிராயமும் இந்த ரிபேட் வேண்டியதில்லை என்பதுதான். ஆந்திர நெசவாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் தென் பிராந்தியத்தில் நடத்திய ஆலோசனைக் குழு கூட்டத்தில் கூட ரிபேட்டை எடுத்துவிட்டால் கவலையில்லை என்று சொன்னார்கள். இன்னும் பல பகுதிகளில் ரிபேட்டை வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சென்னை ராஜ்யம் ஒன்றுதான் ரிபேட் தொகையை எடுக்கக் கூடாது என்று சொல்லி அகில இந்தியாவிற்கும் நீடிக்கச் செய்து கொண்டிருக்கிறது. ரிபேட் தொகையை வேறு வழிகளில் செலவழித்தால் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படும், அவர்களுக்கு பிராவிடெண்ட் பண்ட் வசதி கொடுக்கலாம், வீடு கட்டிக் கொடுக் கொடுக்கலாம் என்று மாற்று யோசனை சொல்லுகிறார்கள். சென்னையைப் பொறுத்த வரையில், கைத்தறியானது ரிபேட் கொடுத்தால் தான் நல்ல முறையில் விற்கும் என்பது அபிப்பிராயம். ஆகவே தான் ரிபேட்டை நீடித்து வரவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

Sri A. VEDARATHNAM: ஸார், நம் மாநிலத்திலுள்ள எல்லா பத்திரிகைகளும் ரிபேட் பற்றி தவறான செய்தியைப் பிரசுரித்திருக்கும் போது, அதை மறுத்து உண்மையான செய்தியைப் பிரசுரிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இல்லையா ? அப்படியானால் அதை ஏன் செய்யவில்லை ?

The Hon. Sri R. VENKATARAMAN: நான் சொன்ன செய்தியை கனம் அங்கத்தினர்களே தெரிந்துகொள்ளவில்லை என்பதைப் பார்த்தால் எல்லாப் பத்திரிகைகளும் குறைவு என்பதற்குக் கொடுத்த பப்ளிஸிட்டியை தவறு என்று நினைப்பதற்கில்லை.

Sri T. T. DANIEL: May I know the exact increase in the sale of handloom cloth by giving this rebate in our State?

The Hon. Sri R. VENKATARAMAN: Our sales have been increasing ever since 1953 but with regard to exact figures, I should like to have notice.

Sri G. G. GURUMURTHI: தற்போது கூட்டுறவு சங்கங்களில் பதிவு செய்து கொண்டுள்ள தறிக்காரர்களுக்குத் தான் இந்த ரிபேட்டினால் சௌகரியம் கிடைக்கிறது. அதில் சேராத மற்ற தறிக்காரர்களும் பயனடைய திட்டம் ஏதாவது இருக்கிறதா அது தற்போது யோசனையில் இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: ரிபேட் தொகையை கூட்டுறவு சங்கங்களில் சேராதவர்களுக்குக் கொடுக்க எந்தவிதமான யோசனையும் இல்லை.

7th September 1959]

SRI A. A. RASHEED : Sir, is it a fact that a five-million-dollar worth of order has come from the United States of America for the handloom goods and if so, whether there is any proposal to increase production of 'Madras bleeding' in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : Recently a delegation of the Export organization went to the United States of America to participate in the Chicago Fair. They have been able to secure a considerable volume of orders for special types of handloom cloth as, for instance, Madras handkerchieves, Bleeding Madras and other silk handloom goods. We are trying to utilise the existing co-operative societies for the manufacture of these articles.

SRI A. V. P. ASAITHAMBI : கதருக்கு இந்த சர்க்கார் எடுத்துக் கொள்கிற அக்கறை மாதிரி கைத்தறித் துணிக்கும் இதே சர்க்கார் அக்கறை அதிகமாக எடுத்து தொழிலாளர் குடும்பங்கள் நல்ல முறையில் வாழ வழி செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதேபோலச் செய்கிறோம். அதை விட சற்று கூடக் கூட சலுகைகள் கைத்தறிக்குக் கொடுத்து கொண்டிருக்கிறோம். உதாரணமாக கதர் உற்பத்தி செய்கிறவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் கிடையாது. ஆனால் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. கதர் உற்பத்தி செய்கிறவர்களுக்கு உபகரணங்கள்—அட்டாச்மெண்ட்—கொடுக்கப்படவில்லை. கைத்தறிகளுக்கு "டேக்-அப் மோஷன் அட்டாச்மெண்ட்" முதலிய உபகரணங்கள் கொடுக்கப்படுகின்றன.

SRI P. K. R. LAKSHMIKANTHAM : கனம் சபாநாயகர் அவர்களே, தற்சமயம் ரிபேட் தொகையைக் குறைத்திருப்பதால் அதை எந்த முறையில் உதவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைக்கவில்லை என்று தான் இவ்வளவு நேரமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : இந்த ரிபேட்டை ஹோல்ஸேல் டீலர்ஸ் 9 a.m.
களுக்கு கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஹோல்சேல் டீலர்ஸ்களிடமிருந்து சரக்குகளை வாங்கி வினியோகம் செய்தால் தான் கன்சியூமர்ஸ் வாங்க முடியும். அவர்களுக்கும் ரிபேட் கொடுத்தால் தான் அதிகமாகத் துணி விற்பனையாகும். ஆகையால் இரண்டு பேர்களுக்கும் ரிபேட் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ரிபேட் என்பது யார் துணி வாங்குகிறவர்களோ அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சலுகை. கனம் அங்கத்தினர் ஒரு கைத்தறி ஆடையை வாங்கினால், அதற்கு 10 ரூபாய்க்கு 1 ரூபாய்க்கு 6 நயா பைசா வீதம் ரிபேட் கொடுக்கப்படுகிறது. ஹோல்சேல் டீலர்ஸ்களிடமிருந்து வாங்கி விற்கின்றவர்களுக்கு எந்த கனம் அங்கத்தினர் ஒரு கைத்தறி ஆடையை வாங்கினால், அதற்கு 10 ரூபாய்க்கு 1 ரூபாய்க்கு 6 நயா பைசா வீதம் ரிபேட் கொடுக்கப்படுகிறது. ஹோல்சேல் டீலர்ஸ்களிடமிருந்து வாங்கி விற்கின்றவர்களுக்கு எந்த விதமான கழிவு தொகையும் கொடுக்கப்படுவது இல்லை. விற்பதானது மக்கள் வாங்குவதைப் பொறுத்து இருக்கிறது. அவர்களுக்கு இந்தவிதமான கழிவுத்தொகை குறைவு பாதிக்கப்படாது.

SRI A. GOVINDASAMY : கதருக்கு 3 அணா ரிபேட். கைத்தறிக்கு 2 அணா ரிபேட், கதர் ரெடி மேட் ஆடைகளுக்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை.

கைத்தறி துணிகளுக்கு சேல்ஸ்டாக்ஸ் உண்டு. இது அமைச்சருக்குத் தெரியுமா? இதைத்தான் கைத்தறி துணிகளுக்கு காட்டும் சலுகை என்று அமைச்சர் கருதுகிறாரா?

The Hon. Sri R. VENKATARAMAN : கதர் துணிக்கு கையால் நூல் நூற்க வேண்டும். அதற்காகத் தான் 3 அணு ரிபேட் கொடுக்கப்படுகிறது. கைத்தறி துணியில் மில் நூல் உபயோகப்படுகிறது. மில் நூலுக்கு நாம் எந்தவிதமான ரிபேட்டும் கொடுக்கத் தேவையில்லை. அதனுல் தான் குறைந்த ரிபேட்.

Sri A. MARIAPPAN : ஸார், 1959-ம் வருஷம் மார்ச் மாதம் முடிய மத்திய சர்க்காரிடமிருந்து வரவேண்டிய ரிபேட வந்துவிட்டதா? இதில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறுர்கள்?

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்காக நமக்கு ஒதுக்கிய தொகை வந்து விட்டது. ஆனுல் சென்னை ராஜ்யத்தில் உற்பத்தி அதிகமாகவும் விற்பனை அதிகமாகவும் இருப்பதன் காரணத்தினுல் நாம் அதிகமாக ரிபேட் கொடுத்திருக்கிறேம். நான்கு, ஐந்து வருஷக்கணக்கை எடுத்துக் கொண்டு பார்த்தால் 112 லட்ச ரூபாய் வரை ரிபேட் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த "அரியர்ஸ் ஆப் ரிபேட்" டைப் பெறுவதற்கு சர்க்கார் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறது.

Sri N. MARUDACHALAM : ஸார், சென்னையில் நடந்த கைத்தறி நெசவாளர் பிரதிநிதிகள் மகாநாட்டில் தொழில் அமைச்சர் கலந்து கொண்டாரா? அங்கே ரிபேட் கொடுக்கப்படாததினுல் பல சங்கங்கள் மூடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டதா? இருபத்தைந்து லட்ச ரூபாய் பெறுமான ஜவுளிகள் தேக்கமாகியிருப்பதாகவும் அதை அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கு ஒப்புக்கொண்டதாகவும் சொல்வது உண்மைதானு?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் 3 கேள்விகளை சேர்த்து கேட்டிருக்கிறுர்கள். முதலாவது கைத்தறி மகா நாட்டில் அமைச்சர் கலந்து கொண்டார். இரண்டாவதாக அந்த மகா நாட்டில் ரிபேட் சரியாக கொடுக்கப்படவில்லை என்ற குறை சொல்லப் பட்டது. அதற்கு காரணத்தை அமைச்சர் அப்போது விளக்கினர். சில சங்கங்களில் ரிபேட் தொகை தவருன வகையிலே கோரப்பட்டது. அந்தத் தவருன ரிபேட் கணக்குகளைப் பரிசீலனை செய்தபின்தான் ரிபேட் அனுமதிக்க வேண்டும். கனம் அங்கத்தினர் அவர்களும் இதை ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். சிலர் நூலை நெய்யாமலே கூலி கொடுத்ததாயும், அந்த ஆடைகள் விற்காமலேயே விற்ற மாதிரியாகவும் கணக்கு காட்டி ரிபேட் வேண்டும் என்று கேட்டார்கள். இதையெல்லாம் பரிசோதித்துத்தான் அனுமதிக்கவேண்டும். நாமும் அவர்களுக்கு ரிபேட் கொடுத்த மாதிரி தான் வைத்துக்கொள்ள வேண்டும். (சிரிப்பு.)

Periyar waters

S.N.Q. 2—**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா —

(அ) 27—8—59-ம் தேதி வைகை அணைக்கட்டு திட்டத்தின்படி திருப்பத்தூர், சிவகங்கை தாலூகாவிற்கு பெரியாற்றுத் தண்ணீர் விடப்பட்ட பகுதிகளுக்கு இதுமுதல் தொடர்ந்து வருடந்தோறும் மாமூலாக விடுவதென முடிவு செய்யப்பட்டு விட்டதா?

(ஆ) சிவகெங்கை தாலூகாவில் லெஸ்லி, சீல்டு கால்வாய்களின் மூலம் ஏற்கனவே, பலனடைந்து வந்த குறிப்பிட்ட கண்மாய்கள் உள்ள கிராமங்கள் ஒதுக்கப்பட்டதற்குக் காரணமென்ன? மீண்டும் இவைகளைச் சேர்ப்பதற்கு நோக்கமுண்டா?

(இ) சிவகெங்கை தாலூகாவில் சர்வே செய்யப்பட்ட சீல்டு, லெஸ்லிஸ் கால்வாய்களை சேர்ந்த கிராமங்களைத் தவிர புதிதாக கிராமங்கள் சேர்க்கப்பட்டதற்குக் காரணமென்ன?